# Book Launch 26th September



# ஈழத்தமிழ் மக்கள் போராட்டங்கள் மார்க்சியப் பார்வை

முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்து பத்து வருடங்கள் முடிந்து விட்டது. கடந்த பத்து வருடங்களில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருக்கிறது ஐக்கிய சோசலிசக் கட்சி. இக்கால கட்டத்தில் கட்சிப் பத்திரிகை செந்தாரகையில் வெளியான குறிப்பிட்ட கட்டுரைகளின் தொகுப்பு இது.

தேசியப் பிரச்சினை இலங்கையில் இல்லை என்ற அடிப்படையில் இந்நாட்டு முதலாளித்துவ தலைவர்கள் அனைவரும் செயற்பட்டு வருகிறார்கள். ஆனால் இலங்கை எதிரகொண்டுள்ள மிக முக்கியமான பிரச்சினை இது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆதிகார சக்கதிகளுக்கு எதிராக திரட்சி அடைவதற்கும் ஒடுக்கப்படும்



வர்க்கம் அதிகாரத்தை பிடிப்பதனை நோக்கி நகர்வதற்கும் எமது உரிமைகளை வென்றெடுப்பது அவசியம். இந்த அடிப்படையில் தேசியப் பிரச்சினை பற்றி எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்பது ஒடுக்கப்படும் மக்களின் நலநன முதன்மைப்படுத்தி இயங்கும் புரட்சிகர அமைப்புக்கு அத்தியவசியமானது.

மார்க்சியத்தை வெற்றுக் கோட்பாடாகப் பார்க்காமல் செயன்முறையில் எவ்வாறு அதனை அமுல்படுத்துவது என்பதை ஒரு அமைப்பு முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் திட்டமிடல்களில் பார்க்கலாம். ஒரு புரட்சிகர அமைப்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் தேசியப் பிரச்சினை சார்ந்த விடயங்களை எவ்வாறு அணுகியுள்ளது என்பதை நீங்கள் இந்தப் புத்தகத்தில் பார்க்கலாம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் வழங்கும் படிப்பினைகள் என்ன – நடந்தவை என்ன – நாம் செய்ய வேண்டியவை என்ன – என்பவை பற்றிய சிறந்த உரையாடலைத் தொடங்கி வைக்க இந்தப் புத்தகம் உதவ வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

இந்நூல் கடந்த இருபது வருடகாலத்தில் ஐக்கிய சோஷலிச கட்சியின் வெளியீடுகளான செந்தாரகை மற்றும் ரத்துதருவ பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு ஈழப்போராட்டத்தின் ஒவ்வொரு முக்கிய காலகட்டத்திலும் மார்க்சிய கட்சி என்ன செய்தது. அதன் பார்வை என்னவாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளவும் எதிர்கால திட்டமிடல்களை வகுத்துக் கொள்ளவும் உதவும் சிறந்த நூல் இது.

**Siritunga Jayasuriya**

தொகுப்பாசிரியர் :- சிறிதுங்க ஜயசூரிய

தமிழ் பேசும் மக்கள் போராட்டங்கள் மார்க்சியப் பார்வை